Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.167/**2019**

Deposition of PW4 Witness for Defence

Defence Court

Name :Raju Caste:

Father's Name :Panjavarnam Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 09th December 2021.

**முதல் விசாரணை-**

நான் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுக்கா, காட்டாத்தி கிராமம், களியநாயர் தெருவில் வசிக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன விவேக் என்பவரை எனக்கு நான்கு மாதங்களாக தெரியும். இறந்து போன விவேக் டாஸ்மார்க்கில் மாஸ்டராக வேலை செய்து வந்தார். விவேக்குடன் ரமேஷ், பெரியசாமி, கோகுல், அஜித் ஆகியோருடன் நானும் வேலை பார்த்து வந்தேன். இந்த வழக்கின் எதிரி அஜித்குமார் கடையில் வந்து தான் எனக்கு பழக்கம். 30/05/2019 அன்று எல்லோரும் கேக் வெட்டி சாப்பிட்டார்கள். சண்டை நடந்த போது நான் அங்கு இல்லை. நான் மேலே சென்று படுத்துவிட்டேன். தரை தளத்தில் கேக் வெட்டினார்கள். விவேக் மற்றும் அஜித்குமார் ஆகிய இருவருக்கும் பிறந்தநாள் என்பதால் கேக் வெட்டினார்கள். 12.00 மணியளவில் கேக் வெட்டினார்கள். கேக் வெட்டும் போது அஜித், லோகு, பெரியசாமி, பிரகாஷ், வெற்றிசெல்வன் ஆகியோருடன் நானும் இருந்தேன். எதிரியும் அங்கு இருந்தார். விவேக்

அஜித்குமாரின் அம்மாவை தவறாக பேசியதால் சண்டை வந்தது. விவேக்கிற்கு காயம் பட்ட விவரம் எனக்கு காலையில் தான் தெரியவந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். விவேக் மருத்துவமனைக்கு சென்ற விவரங்கள் எனக்கு தெரியாது. விவேக் மருத்துவமனைக்கு சென்று காலையில் வந்துவிட்டார். மீண்டும் உடல்நிலை சரியில்லை என்று ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்று காட்டிய போது முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆனால் நான் அவர்களுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்தார்கள். பின்னர் விவேக் இறந்துவிட்டார். பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் மற்றவர்கள் சொன்னதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். இறந்து போன விவேக் மூன்று வேலையும் குடிப்பார். ராமசந்திரா மருத்துவமனையிலிருந்த வந்த போது மருத்துவ ஆவணங்கள் கொண்டுவந்தார்களா என்று நான் பார்க்கவில்லை. விவேக்கின் உறவினர்களுக்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் இரண்டாவது மாடியில் சென்று படுத்திருந்தேன். இறந்து போன விவேக்கும் மருத்துவமனையிலிருந்து வந்து இரண்டாவது மாடியில் தான் படுத்திருந்தார். போலீசார் என்னிடம் எந்த தாள்களிலும் கையெழுத்து வாங்கவில்லை. எந்த நிலை காவல் அதிகாரி என்னை விசாரித்தார் என்று நினைவில்லை. தரை தளத்தில் கிச்சன் மட்டும் இருந்தது. அந்த இடத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்தது. அந்த கண்காணிப்பு கேமராவில் இருந்த பதிவுகளை போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. இறந்து போன விவேக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் முன்விரோதம் எதுவும் இல்லை. இந்த வழக்கில் சாட்சியாக சேர்ப்பது பற்றி போலீசார் என்னிடம் கேட்கவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்று போலீசார் கேட்டார்களா என்று நினைவில்லை. சாட்சி ரமேஷ் வந்த போது அவரும் விவேக்கும்

சேர்ந்து குடித்தார்கள். இறந்து போன விவேக் சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இரத்த வாந்தி எடுத்தார். அந்த விவரத்தை விவேக் அவருடைய உறவினர்களுக்கு தெரிவிக்கவில்லை. தரை தளத்தில் இருந்த கிச்சனில் சமயலுக்கான சாமான்கள் எல்லாம் இருக்கும் என்றால் சரிதான். எந்த பாத்திரத்தால் அஜித்குமார் அடித்தார் என்று எனக்கு தெரியாது.